நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)



நற்பணிகள் செய்கின்ற நகரத்தார் குரலுக்குக்
கற்பகத்துப் பிள்ளை கழலடிகள் காப்பாமே

பிப்ரவரி 1982

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)

குரல் 1
ஒலி 1

துன்மதி
தை
பிப்ரவரி
1982

கௌரவ ஆசிரியர்:
லெ. அழகுசுந்தரம் செட்டியார்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ நடராசன் செட்டியார்

அலுவலகம் :
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625001.
தொலைபேசி ; p. p. 26668

பொன்மொழி

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."
— திருக்குறள்

கன்னியர்கள் வாழ்வுபெற மாலை
காளையர்கள் வாழ்வுயர வேலை

"நகரத்தார் குரல்" பத்திரிகையின் ஆலோசனைக்குழு உறுப்பினர்கள்

S. முத்துக்கருப்ப செட்டியார்

RM. முத்தழகப்ப செட்டியார்

S. முத்துராஜா செட்டியார்

RM. நடராஜன் செட்டியார்

சிக. அரு. சோம. இராமநாதன் செட்டியார்

S. N. S. சொக்கலிங்கம் செட்டியார்

S. அரசகேசரி செட்டியார்

SP. முத்துராமன் செட்டியார்

குரலின் குரல்

நகரத்தார்களின் முன்னேற்றங் காண "நகரத்தார் குரல்" இன்று ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. நகரத்தார்களின் இதய ஒலியாக – ஒற்றுமைப்பட்டு உயர்வு காணத் துடிக்கும் அவர்கள் உள்ளங்களின் ஆர்வ ஒலியாக –வழிகாட்டி வளஞ்சேர்க்கும் அறிவு ஒலியாக "நகரத்தார் குரல்" ஒலித்துக் கொண்டிருக்கும்.

கூட்டு முயற்சிக்கு வழி வகுப்பதே குல அமைப்பு. ஒரு குலத்தின் கூட்டு முயற்சியும் செயல்களும் நாட்டு வாழ்வின் முன்னேற்றத்திற்குத் தடையாக, தீமையாக இல்லாத வகையில் – மற்ற குலத்தினருக்குப் போட்டியாக இல்லாத வகையில் அமைய வேண்டும். நகரத்தார் குலத்தினர் பன்னெடுங்காலமாகவே நம் நாட்டில் அறங்களையும் ஆலயங்களையும் தெய்வப் பணிகளையும் வளர்த்து வருகின்றனர். நாட்டு முன்னேற்றத்திற்காகப் பல துறைகளிலும் பணியாற்றி வருகின்றனர். இன்று உயர் கல்விக்கும் தொழிற் கல்விக்கும் வாய்ப்புக்கள் பெறுவதற்கு உள்ள தடைகளை அகற்றி முன்னேறத் துடிக்கின்றனர். ஒரு காலத்தில் செல்வ நிலையில் உயர்ந்திருந்தாலும் அயல் நாட்டு வாணிபம் இல்லாத இக்காலத்தில் உயர் கல்வி வாய்ப்பு இல்லாத இளைஞர்களும், திருமண வாய்ப்பு அமையப் பெறுத கன்னியர்களும் ஏராளமாக இருக்கிறார்கள். திருமண முறைகளில் சீர்திருத்தம் செய்தால் ஒழிய இக்கன்னியர்களின் திருமணத்திற்கு வழியே இல்லை. அதுபோல அரசு நகரத்தார்களைப் பிற்பட்ட சமூகம் என்று அறிவித்தால் ஒழிய உயர்கல்வி வாய்ப்பிற்கு வழியில்லை. தொடர்புடையோர் எல்லோரும் இதற்கு ஆவன செய்ய "நகரத்தார் குரல்" ஒலிக்கும்.

இப் பத்திரிகையின் வெற்றிக்கு நகரத்தார்களும் மற்ற அன்பர்களும், ஒத்துழைப்புத்தர வேண்டுகிறோம்.

நம்மை வாழ்த்துகிறார்கள்

"ஈதல் இசைபட வாழ்தல்" என்ற கருத்திற்கு இலக்கணமாகத் திகழ்ந்து 'அன்னயாவிலும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' என்ற பாரதியின் வாக்கிற்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்து சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் தொண்டாற்றி வரலாறு படைத்த பெருமை நாட்டுக்கோட்டை நகரத்தாருக்குரியதாகும்.



இயல்பாகவே சிறப்புகள் பல அமையப் பெற்ற இந்தச் சமுதாயத்தின் குரலை ஒலித்து அதன் நலன்களைப் பிரதிபலிக்க திங்கள் இதழ் ஒன்று வெளி வர இருப்பதையும் அதன் ஆசிரியராக திரு. வி. என். சிதம்பரம் அவர்கள் பொறுப்பேற்று இருப்பதையும் அறிந்து மகிழ்கிறேன்.

"ஏடுகள் நாட்டில் உள்ளதை, நடப்பதை மக்கள் வாழ்க்கை முறைகளை எடுத்துக் காட்டும் கண்ணாடியாகக் காட்சியளிக்க வேண்டும். நாட்டோரை நடுநிலை பிறழா நல் நீதிபதிகளாக்க உறுதுணை புரிய வேண்டும்" என்பது பேரறிஞர் அண்ணா அவர்களின் பெரும் விருப்பமாகும்.

முச் சங்கம் வைத்து முத்தமிழ் வளர்த்த மூதூரிலிருந்து வெளிவரவிருக்கும் 'நகரத்தார் குரல்' நாட்டுக்கும், சமுதாயத்திற்கும் பலன் தரும் வகையில் பயணம் தொடரும் என்று நம்புகிறேன்.

"நகரத்தார் குரல்" மாத இதழ் தனது பணியில் வெற்றியடைய என் நல்வாழ்த்துக்கள்.

இராம. வீரப்பன்

செய்தி, அறநிலையத் துறை அமைச்சர்
தலைமைச் செயலகம்
சென்னை-600 009.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் நலன் கருதி புதிய ''நகரத்தார் குரல்'' திங்கள் ஏடு வெளிவர இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி. தொன்மைப் புகழ் வாய்ந்ததும் வரலாற்றுச் சிறப்பு மிக்கது மான நகரத்தார் சமூகம் ஒன்றுபட்டு கால, தேச வர்த்தமானத்திற் கேற்ப வாழ்க்கை முறைகளைச் சீர்படுத்திச் செவ்வனே பாதுகாக்கவும் ''நகரத்தார் குரல்'' தொண்டாற்றுமென்று நம்புகிறோம். ''நகரத்தார் குரல்'' வலுவான அமைப்புடனும் உறுதியான கொள்கைகளுடனும் அமைந்து நாட்டுக்கும் சமுதாயத்துக்கும், சமயத்துக்கும் தமிழுக்கும் விருப்பு வெறுப்பின்றி சமநிலை நின்று தொண்டாற்றி நகரத்தார் புகழ் பரப்ப எல்லாம் வல்ல தேவி பராசக்தி திருவருள் துணை நிற்கப் பிரார்த்தித்து உளமார வாழ்த்துகின்றோம்.

ஓம் பராசக்தி

ஸ்ரீலஸ்ரீ இராமநாத ஞானதேசிகர்

கோவிலூர் ஆதீனம், கோவிலூர்.

''நகரத்தார் குரல்'' திக்கெட்டும் பரவி ஒலிக்கும் என்பதில் ஐயுற வேண்டாம். இன மான உணர்வை மட்டிலுமேயன்றி உறவுறம் பூணுவது இக்காலத்தில் அரிதாகிவிட்டது என்பதனை ''அகமுடையார் குரல்'' ''வேளாளர் இன ஓசை'' அருமை இன முழக்கப் பேரிகைகள் மெய் எனச் சாற்றி நிற்கின்றன. அவற்றின் வரிசையிலே ''நகரத்தார் குரல்'' செட்டிநாட்டார் மாண்பினை மக்கள் மனத்திடைப் பாய்ச்ச இருப்பது மகிழ்ச்சிக்கும் புகழ்ச்சிக்கும் உரியதே.

குரு மகாசன்னிதானம்

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

மதுரை ஆதீனம், மதுரை.

நாட்டுக்கோட்டை நகரத்தார் சைவத் தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றி வந்திருக்கும் அரும்பணிகள் மிகப்பல. இயற்றல், ஈட்டல், காத்தல் வகுத்தல் என்ற நால்நெறி நின்று இக்குலத்தார் தங்கள் வாழ்வால் பண்பாட்டால் தமிழக வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுத்திகழ்கின்றனர். பல்வேறு துறைகளில் தலைமையும் சிறப்பும் பெற்றுச் சிறந்து வரும் நாட்டுக்கோட்டை நகரத்தாரின் நலம் பேணவும் அவர்தம் நாகரிகம் பண்பாட்டு நெறி முறைகளை நானிலம் அறியவும் வேண்டி திங்கள்

தோறும் வெளிவர விருக்கும் ''நகரத்தார் குரல்'' சீரும் சிறப்பும் பெற்று வளர்ந்தோங்கவும் இப்பணியில் ஈடுபட்டு உழைக்கும் அன்பர் களுக்கு நலம் பல பெருகவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
26-வது குருமகா சந்நிதானம்,
தருமை ஆதீனம், தருமபுரம்.

''நகரத்தார் குரல்'' மாத இதழ் நகரத்தாரின் பெருமைக்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் இருக்கும்; மென்மேலும் நன்கு வளர்ச்சி அடையும்.

எஸ். டி. காசிராஜன் ஐ. ஏ. எஸ்.,
மாவட்ட ஆட்சித் தலைவர்
புதுக்கோட்டை

இந்து சமுதாயத்தில் காணக் கிடைக்கும் படைப்புகளிலும் வரலாறுகளிலும் இலக்கியங்களிலும் சிறப்புமிக்க செயல்களை வெளிக் கொணர்ந்து பார் போற்றும் வண்ணம் அமைத்துக் கொடுத்ததில் வழி காட்டியாக அமைந்ததில் நகரத்தார்களையும் அவர்களால் வெளியிடப் பெறும் ''நகரத்தார் குரல்'' பத்திரிகையும் 'வாழ்க வாழ்க' என வாழ்த்துகிறேன்.

எஸ். கே. பாலகிருஷ்ணன்
மேயர், மதுரை மாநகராட்சி.

தமிழகத்தின் வரலாற்றில் நாட்டுக்கோட்டை நகரத்தாருக்குச் சிறப்பான பங்கு உண்டு. சிலப்பதிகார காலத்திலிருந்து இன்று எழுந்துள்ள இலக்கியங்கள் வரை நகரத்தாரின் பெருமையை எடுத்துரைக்கின்றன.

முடியுடை மூவேந்தர்களுக்குப்பின் செந்தமிழையும் சைவ சமயத்தையும் வளர்த்த பெருமை நகரத்தாரைச் சாரும். திரைகட லோடி திரவியம் தேடி தமிழகத்திலுள்ள ஆலயங்களுக்கெல்லாம் திருப்பணி செய்த பெருமை அவர்களுக்கு உண்டு. அவர்களின் எண்ணங்களை உணர்வுகளை எதிரொலிக்கும் வகையில் ''நகரத்தார் குரல்'' என்ற பெயரில் மாத இதழ் ஒன்றினைத் தாங்கள் தொடங்க இருப்பதை அறிய மகிழ்கிறேன். இதழ் சிறப்புற்று வளர்ந்தோங்க எனது நல் வாழ்த்துக்கள்.

பி. நெடுமாறன்
தலைவர், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ்
சென்னை.

பிப்ரவரி 1982 முதல் ''நகரத்தார் குரல்'' என்ற பெயரில் ஒரு மாத இதழ் வெளிவர இருப்பது தெரிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நகரத்தார்களிடையே தொன்றுதொட்டு நடைபெற்றுவரும் பொன்னுன திருப் பணிகளையும் அறப் பணிகளையும் ஆர்வமுடன் ஊக்குவிக்கும் வகையில் ''நகரத்தார் குரல்'' என்றும் ஒலித்துக் கொண்டிருக்க, நாட்டு மக்களின் நல் உள்ளங்களில் நிலைத்து நிற்க ''நகரத்தார் குரல்'' என்றும் தொண்டாற்றி வர என் நல்லாசியை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மு. அ. முத்தையா செட்டியார்
செட்டிநாடு ஹவுஸ்
சென்னை.

''நகரத்தார் குரல்'' எல்லா வகையாலும் சிறப்பாக அமைந்து சமூகப் பணியில் தக்கார் போற்றத் தழைத்துக் கிளைத்துச் செழித்து வளர, வளர்ந்திருக்க அன்பர் துணையும் ஆண்டவன் அருளும் நிரம்புவதாக!

பெரியார் அழகுசுந்தரம் செட்டியார் கௌரவ ஆசிரியராக அமைந் திருப்பது மாசிகையின் சிறப்புக்கோர் அறிகுறியாகும்.

தென்னகத்தின் புனிதப் பதியாகும் மதுரையில் அங்கயற்கண்ணி உடனுய ஆலவாய் அண்ணல் அருள் சுரக்க உங்கள் பணி பயன் சுரக்க, மனமார, வாய் மணக்க வாழ்த்தி மகிழ்கிறேன்.

வாழ்க நகரத்தார் குரல்! வளர்க அதன் நற்பணி!

கம்பன் அடிப்பொடி
கம்பன் மணி மண்டபம்
காரைக்குடி.

தமிழ்ப் பற்று சைவப் பற்று - இவை இரண்டும் நகரத்தார் களின் இரு கண்களாகும். திரைகடல் ஓடித் திரவியம் தேடும் தமிழ் மரபின் வழிவந்த நகரத்தார்கள் ஈட்டிய செல்வத்தை ஈத்துவந்து இன்பங் காணும் கொள்கையராவர். தமிழகக் கோயிற் பணியில் அவர்களுக்குச் சிறப்பான வரலாறு உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. கல்விப் பணியிலும் நகரத்தார்களின் தொண்டு நன்றிப் பெருக்கோடு நினைத்தற்குரியது. அரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் கல்விக்கும் தமிழிசைக்கும் செய்துள்ள தொண்டு ஒரு தனி மனிதரால் ஆற்றப்பட்ட ஒப்பற்ற சிறப்புமிக்கதாகும். இந் நாளில் அவரது அருந்தவப் புதல்வர் தகைமைசால் முத்தைய வேள் அவர்களின் சேவையும் அளவிடற்கரியது. கல்விப்பணியில் வள்ளல் அழகப்பர், கருமுத்து தியாகராசச் செட்டியார் ஆகியோரின் சேவை களைத் தமிழகம் என்றும் போற்றும்.

தானும் வாழ்ந்து மற்றோர் வாழ்விலும் மனங்களிக்கும் உயர் தனிக் குணம் வாய்ந்த நகரத்தார்களுக்கென்று, அவர்களின் நலம் பேண "நகரத்தார் குரல்" திங்களிதழாக வருவதறிந்து மகிழ்கிறேன்.

பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு
துணைவேந்தர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

தகுதியான அடித்தளத்தில் தரமான முறையில் இதழ் வெளி வந்து நகரத்தார்களின் ஒற்றுமை சிறக்கவும் இளைய தலைமுறையினரின் கல்வி செழிக்கவும் எல்லாம் வல்ல அருள்மிகு ஆலவாய் அண்ணல் அருகமர்ந்த அங்கயற்கண்ணியை வழிபடுகிறேன்.

கருமுத்து சு. சொக்கலிங்கம்
நிர்வாக இயக்குநர்
ஸ்ரீ சிவகாமி மில்ஸ் லிட்., தேனூர்.

"நகரத்தார் குரல்" வெகு விரைவில் மிகச் சிறந்த மாத இதழ் என்று புகழ் பெற்று, நல்ல வளர்ச்சியடைய வேண்டுகிறேன்.

எம். சரவணன்
ஏவி. எம். ஸ்டுடியோ, சென்னை.

நலிவுற்றிருக்கும் நகரத்தார் சமுதாயம் எல்லா வழிகளிலும் முன்னேற சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களை "நகரத்தார் குரல்" பத்திரிகையில் வெளியிடுவீர்கள் என்று நம்புகிறேன்.

N. பழனியப்பன் B. A., B. L.
சேர்மன், சேல்ஸ் டாக்ஸ் அப்பலேட் டிரிபியூனல்
சென்னை

இனப் பற்றை ஏற்படுத்தும் வகையிலும் நம் சமுதாயத்தில் உள்ள குறைகளை வெளிச்சமிட்டுக் காட்டித் திருந்தி வாழ வழி செய்து நற்பாதையில் நடைபோடும் வகையிலும் நம்மிடையே ஒற்றுமையை வளர்க்கும் வகையிலும் "நகரத்தார் குரல்" வலிமை வாய்ந்த சாதன மாகச் செயல்படட்டும்.

லேனா தமிழ்வாணன் M. A.,
கல்கண்டு, சென்னை.

தர்மம், அன்னதானம் போன்ற அருமையான காரியங்களில் மனப் பூர்வமாக ஈடுபட்டு மனசாட்சிப்படி நடக்கின்ற நமது சமுதாயம், இன்று தமிழகத்தில் பல துறைகளிலே ஈடுபட்டுள்ளது. மக்கள் அன்போடு பழக, ஆர்வத்தோடு பணியாற்ற, ஈகைக் குணத்தை வெளிப்படுத்த, உரமோடும், ஊக்கத்தோடும் எக்கணமும் ஏற்றமுடன் வாழ்ந்துயர செயல்வீரர் உயர்திரு. சிதம்பரம் செட்டியார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு "நகரத்தார் குரல்" பொது இதழாக, புது இதழாக பொன் மலராக வெளிவந்து நாடெல்லாம் ஒலிக்க, புகழ் பரப்ப அன்னை மீனாட்சியைப் பிரார்த்திக்கின்றேன்,

கலைமகள் இராம. நடராஜன்
மதுரை

பழைமை, புதுமை இரண்டும் இரண்டு தண்டவாளங்களாக அமைந்து 'நகரத்தார் குரல்' என்னும் வண்டி முன்னேக்கி ஓட உதவும் என்பது உறுதி.

S. சுப்பய்யா செட்டியார்
தலைவர்,
நகரத்தார் சங்கம், கோயமுத்தூர்.

அருமை யான தொண்டுகளை
அழகிய 'நகரத் தார்குர'லே
பெருமை யுடனே நீசெய்து
புகழ்பெற இன்று வாழ்த்துகிறோம்.

அம்பத்தூர் நகரத்தார் மன்றம்
சென்னை-600 053



திருமணச் செய்திகள் பற்றிய ஓர் அறிவிப்பு

நகரத்தார்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நிகழ்ச்சிகள், மணிவிழா நிகழ்ச்சிகள் மற்றும் முக்கிய நிகழ்ச்சிகளின் செய்திகளை எமக்கு எழுதி அனுப்பினல் வெளியிடுகிறோம். புகைப்படத்துடன் வெளியிட விரும்புபவர்கள் புகைப்படத்துடன் ரூ. 25/- கட்டணம் சேர்த்து அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

— நிர்வாகி

நகரத்தார் குரல் வருக!!

முத்தமிழ்மணி கதி. சுந்தரம்

அன்பு நெறியினர் அறத்தின் காவலர்
ஆர்வம் மிக்கவர் அயரா(து) உழைப்பவர்
இடையறு முயற்சியால் எங்கும் உயர்பவர்
ஈகை மிக்கவர் எழில்நிதி வளர்ப்பவர்
உண்மை போற்றும் உயரிய கொள்கையர்
ஊருணி எனவே உதவும் பண்பினர்
எழில்தரு வணிகம் எங்கும் வளர்ப்பவர்

நம்நக ரத்தார் நல்ல பண்புகள்
ஆயிரம் ஆயிரம் ஆயினும் இன்று
காலச் சுழலில் காண வேண்டிய
மாற்றமும் உண்டு மாண்புற நோக்கி
என்ன செய்யலாம் எப்படிச் செய்யலாம்
அறிஞர் சொல்வதை ஆய்ந்து தேர்ந்து
இயல்நெறி காட்ட இங்கே வருவது
நல் நகரத்தார் நற்குரல் ஏடு
மகிழ்ந்தே ஏற்று வாழ்த்துக் கூறுவோம்.

சிதம்பரத் தலைவனைச் சீரிய ஆசான்
ஆகக் கொண்டே அழகு மிகவே
குரல்தர வருவது நிறைபுகழ் தருவது
மதுரையில் இருந்து மணிக்குரல் தரும்இது
கல்விப் பணியில் காண வேண்டிய
அறப்பணி அதனில் ஆற்ற வேண்டிய
திருமணம் தன்னில் செய்ய வேண்டிய
எழுச்சிப் பணிகள் எவைஎவை விளக்கும்.
புதுக்குரல் வருக! கவிக்குயில் வருக!!
சீரிய பணிகள் செழிக்கத் தோன்றும்
எம்குல முரசே! இனத்தின் குரலே!
உன்குரல் கேட்போம்; உள்ளம் உவந்தே
ஆயிரம் ஆயிரம் அருமைத் தொண்டர்
அணிஅணி ஆக அன்புடன் சேர்ந்தே
பணிசெயத் திரள்வோம்; பசுமைக் குரலே!
செட்டி நாட்டின் சிந்தனைக் குரலே!
வருக! உயர்க!! வளர்க!!! வாழ்க!!

கௌரவ ஆசிரியர் பேசுகிறார்:

"நமது சமூகத்திற்கென்று ஒரு பத்திரிகை இருப்பது நல்லதென்பது எனது கருத்து. இந்தப் பத்திரிகையில் நமக்கு வேண்டிய விஷயங்கள் அனைத்தையும் வெளியிடலாம். நமது நகரத்தார் நலனில் அக்கறை மிகக் கொண்ட, எடுத்த காரியத்தைக் கண்ணும் கருத்துமாகக் கவனிக்கக் கூடிய திரு. வி. என். சிடி. அவர்கள் "நகரத்தார் குரல்" பத்திரிகையின் ஆசிரியராக இருப்பதும் பொருத்தமானதே" — இவ்வாறு நம் "நகரத்தார் குரல்" பத்திரிகையின் கௌரவ ஆசிரியர் திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியார் அவர்கள் பேட்டியின் போது கூறினார்கள்.



காரைக்குடியில் சென்ற ஆண்டு பிப்ரவரியில் நடைபெற்ற நகரத்தார் நல உரிமை மாநாடு பற்றிய அவர்களது கருத்தைக் கேட்டபோது —

"காரைக்குடி மாநாடு வெற்றியுடன் நடைபெற்றதற்கு ஆர்வமிக்க நண்பர்களது பணியும், சோர்வில்லா உழைப்பும், மக்களின் எழுச்சியும் தான் காரணம். சென்ற ஆண்டு நடைபெற்ற மாநாடு போல் ஆண்டுதோறும் நடத்தினால் நல்லது என்பது பலருடைய எண்ணம். அதே போல் தான் நானும் நினைக்கிறேன். சென்ற மாநாட்டில் கொண்டுவந்த தீர்மானத்தை விரைவில் நிறைவேற்றிட ஆவன செய்ய வேண்டும். இது மிக முக்கியம்" என்று பதில் தந்தார்கள்.

"இன்றைய நகரத்தார்களின் பிரச்னைகள் யாவை? அவை நீங்க தங்களது அறிவுரை என்ன?"

"நமக்குப் பிரச்னைகள் பல இருக்கின்றன. நம்மில் வசதி படைத்தவர்கள் சிலர்; வசதியற்றோர் பலர். வசதி

யற்றோர்களது பிரச்னைகளைத்தான் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். பல சீர்திருத்தங்கள் ஏற்பட வேண்டும். அதற்கான வழி வகைகளைச் செய்வதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை. ஒத்துழைப்பு இல்லாமல் ஒன்றும் நிறைவேறாது.''

"நமது சமூகத் திருமணங்களில் ஏற்படவேண்டிய மாற்றங்கள் பற்றித் தங்கள் கருத்து ?''

"இது முக்கியமான விஷயம். இது சம்மந்தமாக வேண்டிய யோசனைகளைச் சொல்ல வேண்டும். பண வசதி யற்றோருக்கு ஒரு நல்ல வழியைக் காட்ட வேண்டும். இது முன்பெல்லாம் செய்யப்பட்டும் வெற்றி காணவில்லை. "நகரத்தார் குரல்'' மூலமாகவாவது நல்ல வழியைக் காண வேண்டும்.''

"ஏழை, நடுத்தர மக்கள், வாழ்வில் உயர்வதற்குத் தங்களது அறிவுரை என்ன ?''

"ஏழை நடுத்தர மக்களுடைய பிள்ளைகள் – ஆண்களும் பெண்களும் நன்றாகப் படிக்கிறார்கள். இதைப் பாராட்டு கிறேன். திருமண விஷயத்திலும் வேலை வாய்ப்பு விஷயத் திலும் கூடுமானவரை "நகரத்தார் குரல்'' மூலம் நல்ல வழி வகைகளைச் சொல்லி அதன்படி நடக்கச் செய்து உதவ வேண்டும்.

"நகரத்தார்களுக்குத் தங்களது ஆசிச் செய்தி என்ன ?''

"நகரத்தார் பெருமக்கள் எல்லா வகையாலும் நன் றாக முன்னேற வேண்டும். நம் சமூகம் முன்னேறுவதற் கான உதவிகளை வசதி படைத்த நம்மவர்கள் செய்தால் மிகவும் நல்லது. நகரத்தார் பெருமக்களுக்கு நல்ல பேரும் புகழும் எப்பொழுதும் உண்டு. அது மேன்மேலும் சிறப் புற வேண்டும். நகரத்தார் பெருமக்கள் நல்ல க்ஷேமத் துடன் வாழ வேண்டும். அவர்களுக்கு எல்லா நலன்களும் உண்டாக வேண்டும். 'நகரத்தார் குரல்' அன்னை மீனாட்சி யின் அருளால் சிறப்பாக நடக்க வேண்டுமென்பது என்னுடைய ஆசை''

பல வேலைகளுக்கிடையே நம் பத்திரிகையின் பேட்டிக்கு ஆர்வமுடன் பதிலளித்த அவர்களுக்கு நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



கற்பக விநாயகர்

கவிஞர் இராகவன் முத்து

உறவாடி உன்தாளை மறவாத நல்லோர்கள்
உள்ளங்கள் களிப்பி லாட
உருவாகி நிலையேறும் திருவாலும் புகழாலும்
உன்னருள் மழையி லாடக்
கரவாடும் மதியாலே இடையூறு புரிவதே
கடமையாய் வாழு வார்கள்
கரமாடச் சிரமாட உடல்வாழ்வு கருமமாய்க்
கவலையாம் சேற்றி லாட
அரவாடும் வேணியில் அலையாடும் புனலுடன்
ஆகமோர் அம்மை யாட
அழலாடும் மேனியார் மெழுகாக உருகியே
ஆனந்த முத்த மாடச்
சிரமேறும் மோலியாய் எந்தமிழ் சூடுவாய்
செங்கீரை யாடி யருளே
செம்மாந்து வாழவே கண்காட்டும் கற்பகம்நீ
செங்கீரை ஆடி யருளே.

— ஸ்ரீ கற்பக விநாயகர் பிள்ளைத் தமிழ்

நகரத்தார்

ஏன் எழுப்புகிறோம்?

- நகரத்தார் சமூகம் பிற்பட்ட நிலையிலிருப்பதால் அவ்வினத்து மக்கள் கல்வியறிவு பெறவும், வேலை வாய்ப்புப் பெறவும் வேண்டுமேல், அதனைப் 'பிற்பட்டோர் பட்டியலில்' சேர்த்தாக வேண்டும்.

- நகரத்தார் மரபினர் மொழி, சமயம், நாடு ஆகியவற்றில் மிகவும் கணிசமான அளவு தொண்டாற்றிப் பொது நலம் பேணி வரினும் அரசின் அமைப்புக்களிலோ, பிற பொது நிலையங்களிலோ மற்றவர்கள் அளவு அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை என்பதை அரசுக்கு நினைவூட்ட வேண்டும்.

- நகரத்தார் தாம் வாழும் ஊர்களைத் திருக்கோயில்களாலும் கல்வி நிலையங்களாலும் ஊருணிகளாலும் சிறப்படையச் செய்துள்ளனர். ஆயினும் செட்டிநாட்டுப் பகுதிகளில் அரசின் கடைக்கண் பார்வை இன்னும் விழவில்லை. அப்பகுதியில் நீர்ப்பாசனம், தொழில் வளர்ச்சி போன்றவற்றில் அரசு துணைபுரியுமாறு வற்புறுத்த வேண்டும்.

- நகரத்தார் மாநாடுகளை அவ்வப்போது கூட்டி, இனச் சிக்கல்களையும் தடைகளையும் மிகவும் தீவிரமாகவும் ஒற்றுமையாகவும் விவாதித்துச் செயற்பட வேண்டும். குடியரசு நாட்டில் விழித்துக் கொண்டிருப்போரே பிழைக்க முடியும். நம்மிடம் விழிப்புணர்ச்சி யின்மையால், பர்மா முதலியன கைவிட்ட காலத்தில் நாம் இழந்தன பலவாகும்.

- நகரத்தார்கள் கோயில் குளங்களுக்குச் செலவழிப்பது போலத் தம்மினத்தவர்களுக்குக் கொடை கொடுத்துக் காக்க முன்வருவதில்லை என்று ஒருகுறை கூறப்படுகிறது. 'ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர்' என்ற நிலை நம்மிடம் இருத்தல் தகாது. நம் அனைவருக்கும் சமூக உணர்வு தேவை என்பதை, நன்கு பதியச் செய்ய வேண்டும்.

- பார்சி இனத்தவரைப் போல, சிறுபான்மையினராகிய நாம் கூட்டு முயற்சியால் ஒற்றுமையாக முன்னேற வேண்டும். பல கோடி அறக் கட்டளைகள் எடுத்து வைத்து நம்மினத்தவர் தொழில் செய்யவும், கல்வி கற்கவும், நம் பெண்களுக்குத் திருமணம் செய்விக்கவும் முயலவேண்டும்.

- 'நம் இனத்தவர் பிச்சை எடுப்பதில்லை' என்று சிலர் பெருமை பேசுவர். அப்பெருமை, பெருமையாகவே நிலைக்க நாம் பாடுபட வேண்டும். நிலைமை மோசமாகிக் கொண்டு வருகிறது.

- நம் இனத்தில் பிறந்த கன்னியர்கள் கண்ணீர் சிந்தித் திருமணமாகாமல் கசிந்துருகும் காட்சி, இனிக் கூடவே கூடாது. மாடமாளிகைகளில் வாழ்ந்தாலும் மக்களை மறக்கக் கூடாது, 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் சகத்தினை அழித்திடுவோம்' என்றார் பாரதியார். இவ்வினத்தில் பிறந்த 'பெண்ணுக்குத் திருமணமின்றியோ, வாழ்வின்றியோ வாடினும்' அது சமூகத்திற்கே பழியும் பாவமும் ஆகும் என்பதை உணரும் காலம் வரவேண்டும்.

குரல்

எதற்காக எழுப்புகிறோம்?

- பெண் கல்வி வளர்ந்தால், பெண்ணுக்கு வேலை வாய்ப்புக் கிடைத்தால் பல சிக்கல்கள் தீரும்.
- நகரத்தார்கள் சிலரேனும் அரசியலில் ஈடுபடவேண்டும். அங்ஙனம் ஈடுபடுபவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். குடியாட்சி நாட்டில் இவற்றில் எல்லாம் தயக்கம் கூடாது.
- நம்மவர்கள் செய்துள்ள ஆலயப் பணிகள் இமயம் முதல் குமரிவரை எத்தனையோ உள்ளன. அவற்றை முறைப்படி தொகுத்து உலகிற்கு அறிவிக்க வேண்டும்.
- நகரத்தார் சத்திரங்கள் இல்லாத இடமே இல்லை என்பர். அவை அனைத்தையும் பற்றிய புள்ளி விவரங்கள் தேவை.
- இன்று தோன்றி வளர்ந்து வரும் நகரத்தார் சங்கங்கள் பற்றி ஒருவருக் கொருவர் தெரிந்து கொள்ளுமாறு விரிவாக எழுத வேண்டும்.
- நகரத்தார் கல்வி நிறுவனங்கள் கணக்கிலடங்கா. அவை பற்றி உலகிற்கு விரிவாக அறிவிக்க வேண்டும். தேவாரப் பாடசாலைகள் முதல் பல்கலைக் கழகங்கள் வரை ஒன்று விடாமல் விவரம் சேர்க்க வேண்டும்.
- நகரத்தார் குலமரபு, வரலாறு பற்றி அனைத்துச் சான்றுகளும் சிறுகச் சிறுகத் தொகுக்கப்பட வேண்டும்.
- எங்கே திருமணம் நடத்துவது? வாழும் ஊர்களில் நடத்தலாமா? திருமணத்தில் எவ்வெச் செலவுகளைக் குறைக்கலாம்? சீர்வரிசை பரப்புவது தேவையா? மாமியார் சாமானுக்கு என்றெல்லாம் கொடுப்பது சரியா? முதல் வருடம் முறைக்கு என்று வேறு வேண்டுமா? எவ்வகை மாற்றங்கள் தேவை? எவையெவை தேவை? இவற்றையெல்லாம் மனம் விட்டு ஆணும் பெண்ணும் அனைவரும் விவாதிக்க வேண்டும்.
- இனத்துப் பெருமைகளை ஒருபுறம் பேசிக் கொண்டிருந்தால் போதாது; நம் குறைகளையும் ஒருபுறம் சுட்டிக்காட்டிக் கொண்டேயிருக்க வேண்டும்.
- நம் இனத்துப் பெண்களிடம் தாலாட்டுப் பாடுவது முதற்கொண்டு எத்தனையோ கலைத் திறன்கள் உண்டு; பெட்டி மிடைவது முதற்கொண்டு எத்தனையோ தொழில் திறமைகள் உண்டு. அவற்றை வளர்க்க முயல வேண்டும்.
- 'சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்'. சிறு முயற்சி செய்தாலே பெருநன்மைகள் அடையலாம். நம்மிடம் இருக்கும் குறைபாடுகள், தாழ்வுகள், பிற்பட்ட நிலைகள் எளிதில் அகற்றக் கூடியன. அதற்குத் தூண்டுகோல் வேண்டும்.
- நம் சமூகம் சாதி வெறியுடையதன்று. உண்மையில் நாம் நம்மினத்தவரைவிடப் பிறரை நேசிப்பவர்கள். நமக்கு இயல்பிலேயே சாதி கடந்த சமத்துவ மனப்பான்மை உண்டு. நாம் இத்தகைய கூட்டு முயற்சியால், சிவநெறியும் செந்தமிழும் சிறக்கப் பாடுபட வேண்டும். தமிழகமும் பாரதமும் பெருமையுற உழைக்க வேண்டும். மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக ஒற்றுமையுடன் வாழ்ந்து காட்ட வேண்டும்.



ஆவினிப்பட்டி, ஆ. க. ஆ. ஆ. சொக்கலிங்கம் செட்டியார் புதல்வி செல்வி: விசாலாட்சிக்கும் கீழச்சிவல்பட்டி, ஆ. முரு. க. மு. சேதுச் செட்டியார் மகன் செல்வன்: முத்துக்குமார் B. Com. க்கும் 3—12—81 அன்று ஆவினிப்பட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மதுரை, மீனுட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலின் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. V N. சிதம்பரம் செட்டியாரும் மற்றும் நகரத்தார் பிரமுகர்களும் திருமண விழாவில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

நகரத்தார் குரல் வாழ்க
வாழ்த்துகிறேன்

திருமிகுந்த செட்டிநாட்டார் ஒருங்கிணைந்து
  தித்திக்கத் திங்களிதழ் தொடங்குகின்ருர்
அருமைமிகு செயல்வீரர் சிதம்பரரை
  ஆசாஞக ஆக்கியே இருக்கவைத்து
பேரழகு சுந்தரரை கௌரவித்து
  பெருமையுறு ஆசாஞக மதிப்பளித்து
சீரழகாய் நகரத்தார் குரல்ஒலிக்க
  சிறப்பான பதிப்பாசான் நடராசரும்
தேரழகாய் மாதஇதழ் தொடர்ந்துவர
  திருஉடைய பதிஞெருவர் ஆட்சியிலே
பார்புகழ வருகின்ற இத்திங்களிதழ்
  பலஆண்டு வளர்ந்தோங்க வாழ்த்துகிறேன்.

— கவிஞர் T. குமரப்பா
வேந்தன்பட்டி.

குரல்கள் எதிரொலிக்கின்றன

நமது சமூகத்தில் உள்ள திருமணமாகாத பெண்களின் பிரச்னைகள் திருமணம் செய்வதில் உள்ள பொருளாதார நெருக்கடிகள் மற்றும் அது தொடர்பான கேள்விகளுக்கு நமது சமூகப் பிரமுகர் 'கம்பன் அடிப்பொடி' திரு. சா. கணேசன் அவர்கள் இப்பகுதியில் தமது கருத்துக்களை வெளியிடுகிறார்.

இடம் : **கம்பன் மணி மண்டபம்.** நேரம் : **காலை 11-30** மணி. அலுவலக அறைக்கு முன்பாக சாய்வு நாற்காலியில் சற்றே ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார் திரு. சா. கணேசன். நான் வந்த விஷயத்தைக் கூறுகிறேன். அவர் சற்று நிமிர்ந்து உட்கார்ந்து என்னை வரவேற்று, எனது கேள்விகளுக்கு தனது கருத்துக்களைக் கூறுகிறார்.

'' நகரத்தார் குலத்தில் திருமணமாகாத கன்னியர்கள் பிரச்னைகள் யாவை? அவை நீங்க தங்களது யோசனை என்ன? '' என்று எனது முதல் கேள்வியை வெளியிட்டேன்.

அதற்கு அவர்கள் '' அதை நான் ஒரு பிரச்னையாகவே நினைக்க வில்லை திருமணம் செய்வது, அதற்கு இவ்வளவுதான் செலவுசெய்வது என்பது அவரவர் முடிவு செய்ய வேண்டிய விஷயம். அது சட்டம் போட்டு நிறைவேற்றுகிற விஷயமல்ல'' என்றார்கள்.

'' திருமணத்திற்கு மாப்பிள்ளை வீட்டார் விலையுயர்ந்த நகைகளைச் சீர்வரிசையாகக் கேட்கிறார்களே, அதை மாற்றியமைக்க முடியாதா?''

'' பணம் வைத்திருப்பவர்கள் பெரிய பெரிய நகைகளைப் போடு கிறார்கள். பெண்களாகப் பார்த்து சத்தியாக்கிரகம் செய்தால் அது சரியாகிவிடும். கட்டுப்பாடு என்று வைத்தாலும் ஒன்றும் நடக்கப் போவதில்லை''

'' மாமியார் தொகை கொடுப்பதையும் ஸ்ரீதனம் கொடுப்பதையும் நிறுத்த முடியாதா? ''

" பண வசதி படைத்தவர்கள் கொடுக்கிறார்கள் அதைப் பார்த்து இல்லாதவர்களும் போட்டி போட்டுக்கொண்டு கொடுப்பதால்தான் வினையே ஏற்படுகிறது. வரதட்சணைச் சட்டம் என்று ஜாதிக்கொரு சட்டத்தை அரசு கொண்டுவரவும் முடியாது "

" சட்டப்படியான வயது வருவதற்கு முன்பே சிலர் தங்கள் பெண்ணுக்குத் திருமணம் செய்து வைக்கிறார்களே? "

" அதையெல்லாம் நாம் ஒன்றும் செய்ய முடியாது. அது அவரவர்கள் விருப்பத்தையும் சந்தர்ப்பத்தையும் பொறுத்தது."

" நகரத்தார்கள் வாழும் நகரங்களிலேயே திருமணம் போன்ற முக்கிய நிகழ்ச்சிகளை நம்மவர்கள் நடத்தினால் செலவு, சிரமம்; போன்றவை குறையுமல்லவா?

" நம்மவர் திருமணங்கள் திருச்சி போன்ற நகரங்களிலும் சிங்கப்பூர், கோலாலம்பூர் போன்ற நாடுகளிலும் நடைபெற்றிருக்கின்றன. சக்திக்குத் தகுந்தவாறு எங்கு வேண்டுமானாலும் நடத்தலாம். அதனால் ஒன்றும் குற்றமில்லை "

" பெண் கல்வி வேண்டுமென்கிறார்கள். ஆனால் நம் பெண்கள் அதிகம் படித்துவிட்டால் அவர்களுக்குமேல், படித்த மாப்பிள்ளைகளாகத் தேட வேண்டியிருக்கிறதே? "

" பெண்கள் அதிகம் படித்து விட்டால் அவர்கள் பாட்டுக்கு மாப்பிள்ளைகளைத் தேடிக்கொண்டு விடுவார்கள். நமக்குச் சிரமம் இராது படிப்பு வேறு; வாழ்க்கை வேறு. படித்ததற்காக லாபமும் இல்லை படிக்காததற்காக நஷ்டமும் இல்லை."

" திருமணங்களில் சாமான்களைப் பரப்புகிறார்கள். வருஷ முறை என்று பணம், பொருட்களைக் கொடுக்கிறார்கள், இது இன்னும் தேவை தானா? "

" சாமான்களைப் பரப்புவது சட்டப்படி குற்றம். இதெல்லாம் அவர்களாகப் பார்த்து மாற்றிக் கொண்டால் ஒழிய நாமாக முயற்சி செய்தாலும் ஒன்றும் நடக்காது. வருஷ முறையையும் நாம் கட்டுப் படுத்த முடியாது. "

" வேறு ஏதாவது கூற விரும்புகிறீர்களா? " என்று கேட்ட போது.—

" 'நகரத்தார் குரல்' படோடோபமில்லாமல் உண்மையான சேவை செய்யவேண்டும். அதுவே என் பிரார்த்தனை " என்று கூறி பேட்டியை முடித்தார்கள்.

பேட்டி: எல். சுந்தரம்

குரல்கள் எதிரொலிக்கின்றன

நகரத்தார் சமூகத்தில் பெண்களுக்குத் திருமணம் செய்வதில் உள்ள பொருளாதார நெருக்கடிகள், கன்னியர்களின் பிரச்னைகள் மற்றும் அது தொடர்பான கேள்விகளுக்கு மதுரை மருத்துவக் கல்லூரியில் மருந்தியல் துறை இணைப் பேராசிரியையாகப் பணிபுரியும் **டாக்டர் மணிமேகலை மாதவன்** அவர்கள் இப்பகுதியில் தமது கருத்துக்களைக் கூறியிருக்கிறார்.

''நகரத்தார் சமூகத் திருமணங்களில் மாமியார் தொகை, ஸ்ரீதனம் போன்றவை நடுத்தர, ஏழை மக்களுக்குத் தடையாக இருக்கின்றன. அதைப் போக்க தங்களது யோசனை என்ன?'' என்று கேட்ட போது —

''இதை நீக்க கூட்டு முயற்சி தேவை எனக் கருதுகிறேன்.

i) நம் சமூகத்தில் உயர் மட்டத்தில் இருக்கும் பெரியவர்கள் தங்கள் வீட்டுத் திருமண நிகழ்ச்சிகளை முன்மாதிரியாக எளிமையாக நடத்தி மற்றவர்கள் பின்பற்ற வழிகாட்டலாம். மூத்தோர்கள் முன் மாதிரியாக, பரந்த நோக்குடன் செயல்படும்போது, அதை உணர்ந்து மற்ற அனைவரும் ஒருங்கிணைந்து கட்டுப்பாட்டுடன் செயல்பட வேண்டும்.



''காலஞ்சென்ற எனது அருமைப் பாட்டனார் கானாடுகாத்தான் வை.சு. சண்முகம்செட்டியார் அவர்கள் ஏறக்குறைய 48 ஆண்டுகட்கு முன்பு, தன் ஒரே புதல்வியும் எனது தாயாருமாகிய பார்வதி ஆச்சியை, எனது தகப்பனார் காரைக்குடி மெ. நடராசன் செட்டியார் அவர்கட்கு அப்போது கல்வி அமைச்சராக இருந்த பி. டி. ராசன் அவர்கள், பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் செய்துவைத்தார்கள். அப்போது நல்ல வசதி, வாய்ப்புகள் இருந்தும், சமூகச் சீர்திருத்த தொலைநோக்குக் கண்ணுடன் எனது ஐயா அவர்கள் செய்த

காரியத்தை நம் சமூகம் அன்று மனமுவந்து ஏற்கவில்லை. இன்று இந்தப் பிரச்னை வளர்ந்து வரும் நேரத்தில் இதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.''

ii) படித்த இளைஞர்கள் — மாப்பிள்ளைகள் பெண் வீட்டாரின் சிரமத்தை மனிதாபிமானக் கண்ணுடன் கருத்தில் கொள்ள வேண்டும்.

iii) சில வீடுகளில் பெண் வீட்டாரிடம் தங்கள் பிள்ளைக்கு வாங்கி, அதைத் தங்கள் பெண்ணுக்கே செலவிடும் சூழ்நிலையும் உள்ளது. இப்படி, சுற்றிச் சுற்றி வரும் கொடுக்கல்—வாங்கல் சூழ்நிலையும் மாற வேண்டும்.

iv) பெண்கள் படித்து வேலை வாய்ப்பினைத் தேடிக் கொள்ளும் சூழ்நிலை வரும்போது, இதன் சுமை ஓரளவு குறையும் வாய்ப்புண்டு.

v) நம் சமூகத்தில் ஒரு அமைப்பை பெரியவர்கள் நிறுவி மணமக்கள், மணமகன் அமைத்துக் கொடுக்கும் பணியினை மேற்கொண்டு, கொடுக்கல் - வாங்கல் சூழ்நிலை மாற உதவலாம்.

vi) சமூகக் கட்டுப்பாடுகள், அரசு சட்ட முறைகள் மூலம் இந்த சமூகக்கொல்லி பிரச்னைக்குத் தீர்வுகாணலாம்'' என்று பதிலளித்தார்கள்

''திருமணங்களில் சாமான்கள் பரப்புதல் அவசியமா? அதைத் தடைப்படுத்த உங்கள் யோசனை என்ன? திருமணங்களின்போது சீர்வரிசை கேட்டு மாப்பிள்ளை வீட்டார் 'லிஸ்ட்' கொடுக்கிறார்களே, அது அவசியமா?''

''சாமான்கள் பரப்புவது, 'லிஸ்ட்' தருவது— குறிப்பாக இப்போதுள்ள சூழ்நிலையில் அவசியமில்லை என்பது மட்டுமின்றி, அவை புதிய சிக்கல்களை உண்டுபண்ணும் என்பது என் கருத்து. திருமணமாகி, இல்லறம் நடத்தச் செல்லவிருக்கும் தன் பெண்ணுக்கு, பெற்றோர் தங்கள் சக்திக்கேற்ப, அவசியமான, நடைமுறைத் தேவைக் கேற்ப, சாமான்களைக் கொடுத்து அனுப்பலாம். அது கட்டுப்பாடின்றி, ஆடம்பரமின்றி இருக்க வேண்டும். சாமான்களைச் சேகரித்து, அடுக்கு வரிசைகளில் ஆடம்பரத்தைக் காட்டி, பணத்தை முடக்கும் நிலை மாற வேண்டும்.''

''திருமணமாகாத கன்னியர்களின் பிரச்னைகள் தீர தங்களது அறிவுரை என்ன?''

''பெண்கள் படிப்பிலே தீவிரக்கவனம் செலுத்தவேண்டும். தொழிற் கல்வி மூலமாகவோ அல்லது வேலையிலோ சேர்ந்து பொருள் தேடிக்கொள்ளும் நிலையினை அடைந்துவிட்டால் இந்தப் பிரச்னையின் கடுமை ஓரளவு குறையும் என்பது என் எண்ணம்''

(தொடர்ச்சி ... 44ஆம் பக்கம்)

91/1

S. N. S.
PHARMACEUTICAL DISTRIBUTORS

13, NORTH VELI STREET,
MADURAI - 625 001.
Phone : 26474

Dear Sirs,

We are very glad to inform you that M/s. FULFORD (INDIA) PVT. LTD., BOMBAY affiliated with SCHERING CORPORATION, U. S. A., has appointed us as their Distributor at Madurai.

We express our sincere thanks to you for your valuable Patronage and Co-operation.

DISTRIBUTORS / STOCKIST / PREFERED / DEALERS FOR

- E. Merck India Pvt. Ltd., Bombay.
- Allenburys (Glaxo) Bombay.
- Standard Pharmaceuticals Ltd, Calcutta.
- S. G. Chemicals & Pharmaceuticals Ltd. (Suhrid Geigy Ltd.) Bombay.
- Spencer & Co. Ltd., Madras.
- The Fair Deal Corporation Pvt. Ltd, Bombay.
- Tamilnadu Dadha Pharmaceuticals Ltd., Madras.
- Astoria Pharmaceuticals, Madras.
- Citadel Fine Laboratories, Madras.
- P. S K. Pharmaceuticals, Salem.
- The Anglo-French Drug Co., Bombay.
- Fourts India Laboratories Pvt. Ltd., Madras.
- Nicholas Laboratories India Ltd. (Indian Schering Ltd, Bombay)
- Uniloids Ltd., Hyderabad.
- Neroy Pharma Private Limited, Bombay.
- Lupin Laboratories Pvt. Ltd., Bombay.
- Concept Pharmaceuticals Pvt. Ltd, Bombay.
- Bios, Bombay.
- Mit Laboratories, Bangalore.
- Pharmed Pvt. Ltd., Bombay.

F. O. R. Limit Rs. 1000/

நம்மைப் பற்றி

டாக்டர் சுப. அண்ணுமலை

நாம் சிறுபான்மையினர். முற்பட்ட குலத்தார் என்ற முத்திரை நமக்கு ஒரு சுமை. பல தலைமுறையாகப் படித்து, படிப்புச் சூழல் உடையவர்களோடு, மதிப்பெண் பெறுவதில் போட்டியிடவும் முடிய வில்லை. பிற்பட்ட குலத்தார் என்ற சமுதாய அங்கீகாரமும் நமக்கு இல்லை.

நாம் வாணிகம் நடத்திவந்த அயல் நாடுகள் எல்லாம் நமக்குத் தம் கதவுகளை அடைத்துவிட்டன. கடைசிக் கதவாக மலேசியா அடைத்துக் கொண்டதைத் தாள்களில் படித்தோம். மேலோட்டமாக உள்ள நம்மில் சிலர் மட்டும் செய்து கொண்டிருக்கும் — ஆடம்பரத்தைக் கிழித்துக் கொண்டு, செட்டி நாட்டு ஊர்களைப் பார்த்தால் கூரை பிரித்த, இடிந்த சுவர்களே எங்கும் காட்சியளிக்கின்றன. ஒவ்வொரு பெண்ணின் கழுத்தில் ஏறிய தாலியும், அவள் பிறந்த 'பாவத்தைச்' செய்த வீட்டுக் கூரையைப் பிரித்திருக்கிறது; பிரித்து வருகிறது. நாம் இன்னும் பேசிக் கொள்கிறோம், 'மன்னர் பின்னோர்' என்று ..... இப்படிப் பல வறட்டுப் பெருமைகள். நம் இளைஞர்கள் தடை இன்றி வாழ, குழந்தைகளுக்குக் கல்வி கொடுக்க, பெண் குழந்தைகளுக்கு மகிழ்ச்சியுடன் திருமணம் செய்ய, நமது குல வழக்கங்கள், வறட்டு ஆடம்பரப் பழக்கங்கள் ஒரு கட்டாயமாக நின்று — கழுத்தில் சுருக்கிட்டுக் கொல்கின்றனவே — இந்தக் கொலையை நிறுத்துவது இன்று நம் குலத்தின் பொதுக் கடமை என்று எண்ணிப் பார்த்தோமா? நம்மில் ஒரு குடும்பம் அன்று ஒரு கோயிலுக்கே திருப்பணி செய்திருக்கலாம். ஆனால் இன்று ஒரு குடும் பத்தைக் காப்பாற்றுவதே திருப்பணியாக இருக்கிறது.

வணிகம் பறிபோய், உத்தியோகம் புருட லட்சணம் என்ற நிலை வந்து விட்டது. விலைவாசிகள் இமய உச்சியுடன் போட்டியிடுகின்ற இக்காலத்தில், குடும்பம் இருப்பதற்குச் சம்பாதிப்பதே பெரும்பாடாய் விட்ட நிலையில், பிள்ளைகளின் கல்வி, பெண்கள் திருமணம் – இவற்றை நினைத்தாலே குலை நடுங்கும் ''செல்வ நிலையில்தான்'' இன்று நம்மில் 75 சதவிகிதம் இருக்கிறோம். நம் பிரச்சினைகளில் தலைமையானவை மூன்று :

1. இளைஞர்களின் உயர் கல்வி, தொழிற் கல்வி
2. பெண் திருமணம்
3. வேலையில்லாத் திண்டாட்டம்

முதற் பிரசினை தீர ஒரு வழி: மதிப்பெண் கூடுதலாகப் பெற இலவசமாக உதவும் பயிற்சி நிலையங்களைக் காரைக்குடியிலும் மற்ற நகரங்களிலும் உடனடியாக நிறுவுதல். இதற்குச் செல்வர்கள் குலக்கட்டுமை என்று முன் வந்தே ஆகவேண்டும்.

நம் திருமண முறைகள் இன்று நம்மைச் சித்திரவதை செய்கின்றன. இதை எல்லோரும், மற்றவருக்காகப் படுகின்றோம். மற்ற குலத்தார் நம்மை ஏளனம் செய்கின்றனர். திருமணத்தை நாம் வசிக்கும் ஊரில், ஒரு கோயிலில் செய்து, ஒரே சிற்றுண்டியுடன் சாப்பாட்டைக் கட்டுப்படுத்த வேண்டும். மாமியார் சாமான், சாமான் பரப்புதல் என்ற தற்கொல்லி வழக்கங்களை நிறுத்த வேண்டும். காலத்திற்கும் பொருள் வசதிக்கும் ஏற்ப மாறாத இனம் அழிந்தே போகும். அழிந்து விடச் சம்மதமா? பெண்ணைப் பெறுவது பாவம் என்று ஒரு தாயே நினைக்கும்படி செய்து விட்டோமே! இது தருமமா?

அடுத்த பிரசினை வேலை. வேலைகளுக்கு வேண்டிய திறன் இல்லாமல் வெறும் பட்டதாரிகள் பெருகிவருவதே வேலையில்லாத் திண்டாட்டத்தின் முக்கியமான காரணம். பட்டதாரிகளையும் பிறரையும் விருப்பம், தகுதி, திறமைகளுக்கு ஏற்பப் பிரித்துப் பயிற்சி கொடுக்கும் நிலையங்கள், இப்போது செல்வர்கள், தொழிலதிபர்கள் நடத்தும் தொழிற்சாலை, வணிக நிறுவனம் ஒவ்வொன்றிலும் இணைப்பாக (annexe) அமைய வேண்டும்.

நம் குலம் தழைக்க வேண்டுமானால், இளைஞர்களின் கழுத்தில் தண்டனைக் கல்லாக உள்ள பாரங்களை நீக்கி, வளர்ச்சி வழிகளைச் செயல் திட்டமாகச் செய்ய வேண்டுமானால் ஓர் ஐந்தாண்டுத் திட்டம் தேவை. இதைத் தீட்டிச் செயல்படுத்தத் தூண்டும் நகரத்தார் முன்னேற்றச் சங்கம் ஒன்று உடனடியாகத் தேவை. சங்கம் உருவாகுமா?

- நமது நாட்டில் ஆள் இல்லாத லெவல் கிராசிங்குகள் 14 ஆயிரம் உள்ளன.
- ஜப்பானின் பழைய பெயர் என்ன தெரியுமா? எஃடோ [EDO]
- இலங்கையில் விற்கப்படும் நிரோத் சாதனங்களுக்குப் பெயர் - 'பிரீதி'.
- ஒரு தபால் தலை அளவுள்ள மனிதத் தோலில் 30 இலட்சம் செல்கள் இருக்கிறதாம்.
- முதன் முதலாக லைட் ஹவுஸ் கட்டப்பட்டது அலெக்ஸாண்டிரியா வளைகுடாவில்தானாம்.
- முள்ளம்பன்றியின் உடலில் சுமார் 25,000 முட்கள் இருக்கிறதாம்
- உலகிலேயே அதிக முஸ்லீம்கள் வாழும் நாடு இந்தோனேஷியா தானாம்.
- ஆறுமுகநேரி மெயின் ரோடிலுள்ள ஓர் ஜவுளிக் கடையின் பெயர் ''துணி மணி அணி பணி மனை''

— **வி. ஆர். சின்ன அருணாசலம், தேவகோட்டை.**



பாராட்டு விழா

'தமிழ் நாவல்களில் காந்தியத் தாக்கம்' என்ற ஆய்வு நூல் எழுதி டாக்டர் பட்டம் பெற்ற தேவகோட்டை திரு. சபா. அருணாசலத்திற்கும் அமெரிக்க நாட்டில் பணியாற்றி வரும் கண்டரமாணிக்கத்தைச் சேர்ந்த டாக்டர் எஸ்பி. ஆறுமுகத்திற்கும் மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பில் நகர விடுதியில் 27-12-81 அன்று ஒரு பாராட்டு விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு டாக்டர் எஸ். சண்முகம் செட்டியார் தலைமையேற்றார்.

டாக்டர் சபா. அருணாசலத்தையும், டாக்டர் எஸ்பி. ஆறுமுகத்தையும் விழாத் தலைவரும் டாக்டர் சுப. அண்ணாமலை, திரு. செ. செல்லப்பன் ஆகியோரும் பாராட்டிப் பேசினார்கள்.

டாக்டர் சுப. அண்ணாமலை பாராட்டிப் பேசும்போது டாக்டர் சபா. அருணாசலம் தன்னுடைய மாணவர் என்றும் அவரும் தன்னைப் போலவே ஆய்வுத் துறையில் பட்டம் பெற்றிருப்பது தனக்குப் பெருமையைத் தருவதாயும் குறிப்பிட்டார்.

தான் கல்லூரியில் அடியெடுத்துவைக்க, மதுரை நகரத்தார் சங்கம் உதவியதோடு இப்போது தனக்கு ஒரு பாராட்டு விழாவையும் நடத்துகிறது என்று டாக்டர் சபா. அருணாசலம் நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். விடுதலைப் போராட்டத்தில் நகரத்தார்களின் ஈடுபாடு தன்னை இப்படி ஒரு நூல் எழுதத் தூண்டியது என்றும் மேலைச்சிவபுரியைச் சேர்ந்த திரு. சோ. பழனியப்ப செட்டியார் 'மணிவாசகன்' 'காந்திமதி' என்ற காந்தியம் பற்றிய நாவல்களை முதன் முதலாக எழுதினார் என்றும் குறிப்பிட்டார்.

டாக்டர் எஸ்பி. ஆறுமுகம் நன்றி தெரிவித்துப் பேசுகையில் கவியரசு கண்ணதாசனுக்கு சிகிச்சை செய்யும் பாக்கியம் தனக்குக் கிடைத்ததாகவும் அவரது மறைவு நமக்குப் பெருத்த இழப்பு என்றும் குறிப்பிட்டார்.

நகரத்தார் சங்கச் செயலாளர் கவிஞர் சொ. சொ. மீ. சுந்தரம் நன்றி கூறினார்.

குழந்தைக் கவிஞருக்குத் 'தமிழ்ச்செம்மல்' பட்டம்

மதுரை காமராசர் பல்கலைக் கழகம் இவ்வாண்டு குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, சைவ சித்தாந்தக் கழகக் காவலர் வ. சுப்பையா பிள்ளை ஆகிய இருவரையும் 'தமிழ்ச் செம்மல்' என்ற பட்டமளித்துப் பொன்னாடை போர்த்துத் தங்கப் பதக்கம் வழங்கிச் சிறப்பித்தது. 9-1-1982 அன்று நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் பட்டமளித்துப் பாராட்டி வாழ்த்தினார்.

தமிழண்ணலுக்குச் சிறந்த நூல்களுக்காகப் பரிசு

திருவள்ளுவர் நாளாகிய 15-1-1982 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் தமிழக அரசு 1975 முதல் 80 வரை வெளியிட்ட சிறந்த நூல்களுக்குப் பரிசளித்துப் பாராட்டியது. டாக்டர் தமிழண்ணல் எழுதிய 'சங்க இலக்கியத்தில் மரபும் திறனும்' பற்றிய ஆங்கில நூலுக்கு முதற் பரிசு ரூ. 2000மும் 'நச்சு வளையம்' என்ற நாவலுக்கு இரண்டாம் பரிசு ரூ. 1000மும் தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்களால் வழங்கப்பட்டது.

பண்டிதமணி நூற்றாண்டு விழா

புதுக்கோட்டை நகரத்தார் சங்கத்தின் சார்பில் பண்டிதமணி நூற்றாண்டுவிழா 3-1-1982 அன்று குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடைபெற்றது. வி. என். சிதம்பரம் தொடக்கவுரை ஆற்றினார்கள். சித்தாந்த வித்தகர் முரு. பழ. இரத்தினம் செட்டியாரும், டாக்டர் சுப. அண்ணாமலையும் சிறப்புரை ஆற்றினார்கள்.

சேலம் நகரத்தார் சங்கம் மற்றும் நகரத்தார் இளைஞர் சங்கம் ஆகியவற்றின் சார்பில் பண்டிதமணி விழா 17-1-1982 அன்று நடைபெற்றது. மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் வ.சுப. மாணிக்கம் தலைமை ஏற்க துக்காணி எஸ். வரதராசன் டாக்டர் தமிழண்ணல் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். எம். எஸ். உடையப்ப செட்டியார் வரவேற்க, என். எம். நல்லப்பன் நன்றி கூறினார்.

மதுரை திருவள்ளுவர் கழகத்தின் சார்பில் 17-1-'82 அன்று தொழிலதிபர் லெ. நாராயணன் செட்டியார் தலைமை தாங்கப் பண்டிதமணிவிழா சிறப்புற நடைபெற்றது. பேராசிரியர் க. வெள்ளைவாரணர் மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர், சித்தாந்தச் செல்வர் சி. ராம. நாகப்பன், டாக்டர் சுப. அண்ணாமலை ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

சென்னையில் சபரிமலை

டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்களின் பெருமுயற்சியினால் சென்னையில் ஐயப்பன் கோவில் உருவாகி உள்ளது. சபரிமலையில் உள்ளது போலவே பதினெட்டாம் படியுடனும் மற்ற பரிவார தெய்வங்களுடனும் இக்கோயில் உருவாக்கப்பட்டு, 29-1-1982 அன்று குட நன்னீராட்டு நடைபெற்றது.

வயிரவன் கோவிலில் திருக்குட நன்னீராட்டு விழா

திருத்தியமைக்கப் பெற்ற ஆட்சிக் குழுவினரால் வயிரவன் கோயில் பழுது பார்த்துத் திருப்பணி செய்யப்பெற்று 31-1-'82 அன்று திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற்றது. அவ்வமயம் இசையரங்கு, கலையரங்கு, நாட்டிய அரங்கு, கவியரங்கு, பட்டிமன்ற நிகழ்ச்சிகள் பல சிறப்புற நடைபெற்றன.

நாடுபுகழ் நகரத்தார் நல உரிமை மாநாடு

வரலாறு காணாத நகரத்தார் மாநாடு காரைக்குடியில் 1981 பிப்ரவரி 22 ஆம் நாள் நடைபெற்றது. நகரத்தார் சமூகத்தைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்து, கல்வி வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்ளப்பட்ட இம் மாநாட்டில் ஏறத்தாழ 20000 பேர் கலத்து கொண்டனர். இவர்களில் 5000 பேருக்கு மேல் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. காலை நிகழ்ச்சிகள் செட்டிநாட்டரசர் எம். ஏ. முத்தையா செட்டியார் அவர்கள் தலைமையிலும், மாலை நிகழ்ச்சிகள் தொழிலதிபர் லெ. அழகு சுந்தரம் செட்டியார் அவர்கள் தலைமையிலும் நிகழ்ந்தன. தமிழகச் சட்டமன்ற மேலவைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம், தமிழக அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன், தொழிலமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு, காலஞ்சென்ற கவியரசு கண்ணதாசன். கம்பனடிப்பொடி, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கம், பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஏ. ஜி. சுப்பராமன், திரு. எஸ். எஸ். நென்னரசு, சட்டமன்ற உறுப்பினர் திரு. சுந்தரராஜன், காந்தி காமராஜ் தேசீய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. குமரி அனந்தன், சட்டமன்ற உறுப்பினர் திரு, சித, சிதம்பரம், கூத்தகுடி திரு. சண்முகம், சட்டமன்ற உறுப்பினர் திரு. விஜய ரகுநாதத் தொண்டைமான், திருமதி உமையாள் இராமநாதன், சென்னை எஸ். மெய்யப்பன், டாக்டர் மெ. சுந்தரம், டாக்டர் சுப. அண்ணாமலை, கவிஞர் மா. கண்ணப்பன், சொ. சொ. மீ. சுந்தரம் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர்.

மாநாட்டுச் செயலாளர் வி.என். சிதம்பரம் செட்டியார், ஏறத்தாழ ஒரு லட்சம் பேருள்ள நகரத்தார் சமுதாயத்தில் பட்டதாரிகள் குறைவு என்றும், 29000க்கும் அதிகமானவர்கள் வீடுகளை இடித்து நிலை கதவுகளை விற்று வாழும் நிலையில் உள்ளனர் என்றும் இச்சமூகத்தில் 30 சதவிகிதத்தினர் நடுத்தர வகுப்பினர் என்றும் 60 சதவிகிதத்தினர் வறுமையில் வாழ்வதாகவும் வேதனையோடு குறிப்பிட்டார். தமிழக அறநிலையத் துறை அமைச்சர் தமது சிறப்புரையில், "உண்மையில் வறுமையில் சிக்கியிருந்தாலும், போலி ஜம்பம் காரணமாகப் பணக்காரர் போல் நகரத்தார் காட்சியளிக்கின்றனர். நாற்பது ஆண்டுகளுக்கு முன் காரைக்குடியில்தான் அதிக வருமான வரி கிடைத்தது. இன்று வளமிழந்த காரணத்தால் வருமான வரி குறைந்து விட்டது, இரண்டாவது போருக்குப் பின் பர்மா, இலங்கை முதலிய நாடுகளிலிருந்து, நடத்திய தொழிலை மூடிவிட்டு வெறுங்கையோடு திரும்பிய நகரத்தார்களுக்கு, இந்நாட்டில் இந்திய அரசு எந்த உதவியும் செய்யவில்லை. பாகிஸ்தான் பிரிந்தபோது அகதிகளாக வந்த சிந்திமக்களுக்குக் கொடுத்த மான்யத்தைக்கூட, நகரத்தார்களுக்குக் கொடுக்கவில்லை. எனவே இவர்களைப்



சென்ற ஆண்டு காரைக்குடியில் நடைபெற்ற நகரத்தார் நல உரிமை மாநாட்டில் செயலாளர் திரு. வி. என். சிதம்பரம், செட்டிநாட்டரசர், தமிழக அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன்



செயலாளர் திரு. வி. என். சிதம்பரம், அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பனை வரவேற்று அழைத்துச் செல்கிறார்.



பொருளாளர் லெட்சுமி எம். சிங்காரம் செட்டியார், சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சி., கம்பன் அடிப்பொடி.



மாநாட்டில் கவியரசு கண்ணதாசன் கலந்து கொண்டு பேசும் கவின்மிகு காட்சி.

பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கை நியாயமானது'' என்று கூறினர். நகரத்தார் சமூகத்தில், கல்விப்பணி, அறப்பணி, இலக்கியப் பணி ஆகியவற்றில் பெரும் பங்கு பெற்ற சான்ரோர்களின் படங்கள் திறந்து வைக்கப்பட்டன. நகரத்தார் சமூகத்தைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கத் தமிழக அரசைக் கேட்டுக்கொண்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாநாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்வதில், தலைவர் லெ. அழகு சுந்தரம் செட்டியாரவர்களும், செயலாளர் வி. என். சிதம்பரம் செட்டியாரவர்களும், பொருளாளர் காலஞ்சென்ற லெட்சுமி சிங்காரம் செட்டியார் அவர்களும் பெருமுயற்சி எடுத்துக்கொண்டனர். நகரத்தார் பெருமக்கள் பலரும் பொருளுதவியோடு உடல் உழைப்பும் தந்து சிறப்பாகப் பணியாற்றினர். நகரத்தார்களை மொத்தமாகக் கூட்டி, பல செய்திகளையும் அடிக்கடி விவாதிக்கவும், பொதுக் கருத்துக்களை உருவாக்கவும் இம் மாநாடு நல்ல தொடக்கமாக அமைந்தது என்ருல் அது மிகையாகாது.

கவியரசும் கன்னித் தமிழும்

— பாவலர் பாக்கியமணாளன் —

தென்றலிலே கவிதையெல்லாம் எழுதச் சொல்லி
செந்தமிழின் இலக்கணத்தைக் கற்றுத் தந்து
மன்றத்தில் பல்லோரைக் கவிஞ ராக்கி
மறைந்திட்ட மாக்கவிஞன் கண்ண தாசன்
இன்னிசையின் பாவாலே இந்த நாட்டில்
இசைத்தமிழை வளர்த்திட்டார் பட்டி மன்றில்
இன்னோசை வழங்கிட்டார் தெருக்கள் எல்லாம்
ஈடில்லாக் கவியரங்கம் நடத்தி வந்தார்
தித்திக்கும் செந்தமிழால் நாட்டி லெல்லாம்
தேன்மாரி பொழிந்திட்ட கார்மே கத்தை
எத்திக்கும் ஏத்துகின்ற இமயக் கோட்டை
ஈடில்லா நீரூற்றை இனிய காவை
எத்திசையும் புகழ்மணக்கும் தென்றற் காற்றை
ஏழிசையும் தவழுகின்ற தமிழோ சையை
முத்தாரம் கொடுத்திட்ட முத்தை யாவை
முத்தமிழும் இழந்தாளே முத்தா ரத்தை

நம்மவர்களும் விருந்தோம்பலும்

லேனா தமிழ்வாணன்

வந்தவர்களை 'வாங்க வாங்க' என்று வாய்நிறைய வரவேற்று, அவர்களை உபசரித்து அனுப்புவதில் நகரத்தார்களுக்கு இணையாக ஒரு பிரிவினரையும் கூற முடியாது.

நான் ஒரு நாட்டுக்கோட்டை நகரத்தாருகப் பிறக்காமல், மேற்றுப் பிரிவில் பிறந்திருந்தாலும் இதே கருத்தைத்தான் சொல்லியிருப்பேன்.

அது மட்டுமல்ல,

செட்டிய வீட்டுத் திருமணங்களுக்கு வேற்றூர்களிலிருந்து வரும் வேற்றினத்தவர்களும் இந்தக் கருத்திலிருந்து வேறுபடுவதில்லை.

திருமணப் பலகாரம் என்ருல் வெறும் வெண்பொங்கலும் இட்டலியும் சாப்பிட்டு நாக்குச் செத்துப் போன அவர்களுக்கு, செட்டிநாட்டுப் பேரிலையையும் எண்ணிலடங்காப் பலகாரங்களையும் காணும் போது அசந்து போய்விடுகிருர்கள். எட்டியும் எடுக்க முடியாமல் களைத்து விடுகிருர்கள். என்னிடம் பல சந்தர்ப்பங்களில் மனம் விட்டுக் கூறியவர்கள் பலர். எனக்கு நன்ருக நினைவிருக்கிறது. செட்டி நாட்டுப் பிரசுரகர்த்தர் ஒருவர் வீட்டுத் திருமணம். அச்சக உரிமையாளர் ஒருவர் சென்னையிலிருந்து வந்திருந்தார். பந்தியில் எனக்குப் பக்கத்தில் அமர்ந்தார். வரிசையாகப் பத்துப் பேர் முதல் நடையாக வந்து ஆளுக்கு ஒரு வகையை வைத்துவிட்டு மீண்டும் ஒரு நடை வந்து வேறுவகை உணவுகளைப் பரிமாறிய போது, அவருக்குவியப்



புத் தாளவில்லை. சமையலில் எத்தனை வகை உண்டோ அத்தனையும் உருப்பெற்று அவர் இலையில் அணிவகுத்திருந்ததுதான் காரணம். சற்று நேரத்திற்கெல்லாம் எழுந்திருக்க முயன்ருர். ''சார் சார்! என்ன அதற்குள்?'' என்று அவரைக் கையமர்த்திய போது, ''அட, நீங்கள் வேறு! இலையின்

வலது கோடியில் இருக்கிற மண்டியை எடுக்கிறேன்'' என்றார். ''ஏன்சார் இவ்வளவு பெரிய இலையெல்லாம் போடுகிறார்கள்?'' —செல்லமாகக் கண்டித்தார். அப்புறமும் ஐஸ்கிரீம், பழம், பாதாம் கீர் என்று என்னென்னவோ வந்தன. அவருக்கு இது விநோத அனுபவம். சாப்பிட்டு முடிந்ததும் ''கொஞ்சம் தூக்கிவிடுங்கள்'' என்றார். ''ஏன்?'' என்றேன். ''எனக்கு நினைவு தெரிந்து இப்படிச் சாப்பிட்டதில்லை. உணவு வகைகளை எடுப்பதற்காக எழுந்திருந்து எழுந்திருந்து எடுத்து வயிறு முட்டச் சாப்பிட்டதால் இப்போது உண்மையாகவே எழுந்திருக்க முடியவில்லை'' என்றார்.

அதுமட்டுமா ?

''என்ன வேண்டும், என்ன வேண்டும்? அதை வை இதை வை!'' என்று உணவோடு உபசரிப்பையும் அன்பையும் கலந்து பரிமாறும் விதமெல்லாம் மற்றவர்களுக்குப் புதிது. உண்மையில் நெகிழ்ந்து போய்விடுகிறார்கள்.

வெள்ளைப் பணியாரம் எண்ணெயில் வெந்தும் எப்படிச் சிவக்காமல் இருக்கிறது?

தேன்குழல் இத்தனை மெதுவாய் இருப்பது எப்படி?

பால் பணியாரம் மசால் சீயமெல்லாம் எப்படிச் செய்கிறார்கள்?

— என்றெல்லாம் என்னிடம் கேட்டிருக்கிறார்கள். (என் மனைவிக்கே தெரியாதே, எனக்கு எப்படித் தெரியும்?)

என்ன நல்லது கெட்டது என்றாலும் ஊரெல்லாம் கூட்டிச் சாப்பாடு போட வேண்டும், எவரும் குறைகூறும் வண்ணம் இல்லாமல் பிரமாதமாக இருக்க வேண்டும் என்று செலவைப் பாராமல் வயிற்றுக்கு வார்க்கும் நம்மினத்தின் ஈகைக் குணத்தை எண்ணிப் பெருமைப்படுகிறேன்.

கௌரவத்திற்காகச் சம அந்தஸ்துஉள்ளவர்களுக்கு மட்டுமின்றி ஏழை எளியவர்களுக்கும் வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் சமைத்துக் கொட்டும் வள்ளல் தன்மையை வியந்து போற்றுகிறேன்.

சாப்பாடு போடுவதற்கென்றே நகரத்தார்கள் கட்டி விட்ட தரும சத்திரங்கள் எத்தனையெத்தனை!

தவித்த வாய்க்குத் தண்ணீர் கொடுக்க ஏற்படுத்தப்பட்ட தண்ணீர்ப் பந்தல்கள் எத்தனையெத்தனை!

தண்ணீர்ப் பந்தலென்றால் இயற்கை தந்த நீரா? இல்லை! கறிவேப்பிலை - சீரகமிட்டு அருந்தியவர்கள் உள்ளளவும் நினைக்கும் வகையில் உப்பிட்டு-அருமையான மோர், நெஞ்சினிக்க - நாக்கினிக்கப் பானகம்.

எந்தச் செட்டிய வீட்டிற்குப் போனாலும் ஏதேனும் சாப்பிடாமல் தப்பித்து வரமுடியாது. இரவு பன்னிரண்டு மணிக்குப் போகநேர்ந்தாலும் பழங்கஞ்சியும் கறிவடகமும் ஊறுகாய் வகைகளும் தோசை மாவும் சுண்டக் குழம்பும் மிளகாய்ப் பொடியும் காத்திருக்கும்.

எதிர்பாராத விதமாக எத்தனை பேர்வந்திறங்கினாலும்அவர்களின் வயிற்றை நிரப்பும் திறமை ஆச்சிமார்களுக்கு உண்டு.

நேரங்கெட்ட நேரத்தில் போனாலும் 'கலர்' தயாராய் இருக்கும். நொறுக்குத் தீனிகள் தகரங்களில் காத்துக்கிடக்கும்.

சாப்பிடாமல் போனால் அது பெருங் குற்றமாகக் கருதப்படும். ''இப்படிச் சாப்பிடாமல் போறீகளே!'' என்ற ஏக்கக் குரல் எழத் தவறாது. வயிற்றுத் தொல்லைகளை வரவழைத்துக்கொள்ளும் வகை-யில் சாப்பிட்டால்தான் அவர்கள் மனம் ஆறும்.

ஆனால் —

வசதியாய் வக்கணையாய்த் தின்றுவிட்டுத் திண்ணையில் உறங்கும் கூட்டமா நம் இனம் ?

இல்லை!

'செட்டிப்பிள்ளை கெட்டிப் பிள்ளை' என்று ஊரும் உலகும் மெச்சும் இனம்.

காவடியும் பல்லக்கும்

சொ. சொ. மீ. சுந்தரம் எம். காம்.,

அதிசயம் அனேகமுற்ற பழனிமலையடிவாரத்தில் ஒரு காட்சி. ஒரு செட்டியார் காவடி எடுத்து ஆடிக்கொண்டு வருகிறார். அவர் முகத்தில் பழனியாண்டவன் அருள் முழுமையாகத் தெரிகிறது. இட்ட சூலத்தையும் நட்ட கல்லையும் சொன்ன சொல்லையும் அழிக்காத பெருமையுடைய நகரத்தார்கள் பலர் அவரிடம் வரம் கேட்கிறார்கள். அவர் சொல்லிக்கொண்டே வருகிறார். திடீரென்று கூட்டத்தில் ஒரு சலசலப்பு. ஒருவர் குதிரை மேல் வந்து இறங்குகிறார். அவருக்குப் பின்னால் ஒரு கூட்டமே வருகிறது. 'அரசர் அரசர்' என்று பலரும் வழிவிட்டு நிற்கிறார்கள். வந்தவர் காவடி எடுத்தாடும் செட்டியாரிடம் சென்று வணங்கி நிற்கிறார். செட்டியார் திருநீறு தந்து ''உன் கனவில் மூன்று நாட்களுக்கு முன் வந்து, ஆண் குழந்தை பிறக்குமென்றும் உன் மனைவியின் கனவில் வந்து, நாள் ஒன்றுக்கு இரண்டு தரம் பழனி மலையைப் பக்தியோடு ஒரு வாரம் சுற்றி வந்தால் ஆண் குழந்தை பிறக்கும் என்றும் சொன்னேனே, நினைவிருக்கிறதா?'' என்று கேட்கிறார். அர்சர் மெய் மறந்து தலையை ஆட்டுகிறார். ''ஆண் குழந்தைக்கு வையாபுரித்துரை என்று பெயர் வை'' என்கிறார் செட்டியார். அரசர் மகிழ்ச்சியடைய ''அன்னதான மடத்துக்கு வா. இன்னும் சொல்கிறேன்'' என்று செட்டியார் கூற, எல்லோரும் அன்னதான மடத்திற்கு வந்தார்கள்.

பழனியப்பன் அருளாடியாரானசெட்டியார் ஆறுகால் சவுக்கையில் ஏறி அமர்கிறார். அரசர் அருகில் இருக்கிறார். அப்பொழுது செட்டியார் நீ எனக்காக இருநூறு வராகன் கொண்டுவந்திருக்கிறாய் (ஒரு வராகன் என்பது மூன்றரை ரூபாய்) அடிவாரத்திலிருந்து அரண்மனைக்கு ஆள் அனுப்பி பட்டத்தரசியை அழைத்துவரப் பல்லக்கு எற்பாடு செய்திருக்கிறாய். அந்த அம்மாவிடம் முன்னூறு வராகன் எடுத்துவரச் சொல்லியிருக்கிறாய். இப்பொழுது நீண்ட நேரமாகியும் வரவில்லையே என்று நினைக்கிறாய். அப்படித்தானே'' என்று கேட்க, ஆண்டவன் சந்நிதியில் அடியவனாயிருக்கும் அரசன் பக்திப் பணிவோடு ஒப்புக்கொள்கிறான்.

செட்டியார் தொடர்கிறார். "உன் மனைவி வரும் பல்லக்கைத் தூக்கி வந்த ஆட்களில் ஒருவனுக்குக் காலில் காயம் உண்டாகியிருக் கிறது. அதனால் தான் தாமதம். இன்னும் ஒரு நாழிகையில் (இருபத்து நான்கு நிமிடத்தில்) வருவார்கள்" என்று சொன்னதும், அரசன் வியந்து நிற்கிறான்.

செட்டியார் கூறியபடியே எல்லாம் நடக்கின்றன. பட்டத்தரசி வந்து வணங்கிப் பழனியாண்டவன் திருவருள் விளக்கம் பெற்ற அருளாடியாரிடம் வரம் கேட்க "அடுத்த ஆண்டு உனக்குத் தொட்டில் கட்டிக் கொடுக்கிறேன். நீ வைத்திருக்கும் வலம்புரிச் சங்கைக் கொடு" என அருள்வாக்கு வருகிறது.

அதற்கு ஒப்புக்கொண்ட அரசி "என்னிடம் வலம்புரிச் சங்கு இருப்பது இவருக்கு எப்படித் தெரியும்" என்று அரசனிடம் கேட்க, அரசன் "செட்டியாரா பேசுகிறார். அவர் மூலம் தெண்டபாணி யல்லவா பேசுகிறான்" என்று கூறுகிறான்.

அரசனும் அரசியும் திருநீறு பெற்றுக்கொண்டார்கள். அரசன் தன் கழுத்திலிருந்த சந்திரஹாரம் எனப்படும் மாலையைக் கழற்றிச் செட்டியார் கழுத்தில் போட்டு "இதைத் தங்களுடையதாகவே வைத் துக் கொள்ளுங்கள்" என்று வேண்டுகிறான். அன்னதான மடத்திற்கு ஐம்பது பொன் கொடுத்து "இனி எனக்கு மரியாதை தருவது போல, இந்தச் செட்டியாருக்கு இரண்டாவது மரியாதை தரவேண்டும்" என்று பிற நகரத்தார்களிடம் கேட்டுக் கொள்கிறான். பிறகு பல்லக்கில் ஏறிக் காவடியை வழிபட்டு அரண்மனைக்குச் செல்கிறான்.

இந்நிகழ்ச்சி ஏறத்தாழ 1760ஆம் ஆண்டையொட்டி நடந்தது. அரசன் பெயர் விசயகிரி வேலாயுத துரை. செட்டியார் பெயர் இரணியூர்க் கோயிலைச் சார்ந்த பெ. குட்டயன் செட்டியார். இன்றைய கண்டனூர் அருளாடியார் இவர் மரபைச் சேர்ந்தவரே.

முருகன் அருள் பெற்ற காவடியை அரசன் பல்லக்கு வழிபட்டது. மெய்யன்பர்களாகிய நகரத்தார்கள் மூலம் பழனியாண்டவன் இன்றும் வெளிப்பட்டு அருள் செய்வதைப் பழனிக் காவடியோடு பாதயாத்திரை செல்லும் பக்தர்கள் அறிவார்கள். "செட்டி மகனே! தங்கக் கட்டி மணியே" என்று போற்றுமாறு முருகப் பெருமான் நகரத்தார்களோடு இரண்டறக் கலந்திருப்பது இச்சமூகத்தார் செய்த தவப்பயனே அல்லவா!

உ

ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் துணை



முன்னவனே யானை முகத்தவனே முக்தி
நலம் சொன்னவனே தூய்மை சுகத்தவனே
மன்னவனே சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ்
சேகரனே நற்பரனே நின் தாள் சரண்.

தரம் - சிறந்த தரம் ★ விலை - உரிய விலை

திருமணம், சாந்தி, சதாபிஷேகம்
விசேஷங்களுக்கு அசல் வெள்ளி ஜரிகை
வேஷ்டிகள், துப்பட்டாக்கள் வாங்க
கைராசியான ஸ்தாபனம் :

மாதவன் டெக்ஸ்டைல்ஸ்

ஜரிகை வேஷ்டி, துப்பட்டா உற்பத்தியாளர்கள்

74, கான்பாளையம் 4வது தெரு

மதுரை - 625 009.

தொலை பேசி : 33368

இன்றைய தலைமுறையின் இணையற்ற தருமங்கள்

பன்னெடுங்காலந்தொட்டு நம் நகரத்தார்கள் சைவமும் தமிழும் தழைக்க அள்ளிக் கொடுத்த பொன்னும் பொருளும் கணக்கிலடங்கா. எங்கெங்கு விண்தொடும் கோபுரங்கள் கொண்டுள்ள தெய்வத் திருத் தலங்கள் உள்ளனவோ அங்கெங்கெல்லாம் நம்மவரின் தர்மங்கள் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்ற காட்சி கண்கூடு.

இப்படி தான தருமங்களில் தண்ணீர் எனச் செல்வம் எல்லாம் செலவிட்ட சீலர்களைச் சிறப்பாகப் பெற்ற நாம் இன்று இன்னல்களுக்கு இலக்காகித் தருமங்கள் கேட்கும் நிலைக்கு வந்து விட்டோம்.

இந்நிலையிலும் பண்டைய வள்ளல் பரம்பரை இன்னும் நம்மிடையே இருக்கிறது என்பதற்குச் சான்று கூறும் முறையில் அதிலும் இன்றைய இளைய தலைமுறையினரும் தருமங்களில் — குறிப் பாகத் தெய்வத் திருப்பணி, கல்விப்பணி இவைகளில் வெளித் தெரியாமல் செலவிட்டு வருகின்றனர். அவ்வரிசையில் கலைத்தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களின் பேரன், கருமுத்து தி. சுந்தரம் செட்டியார் அவர்களின் மகன், சிவநெறிச் செல்வர் திரு. கருமுத்து. சு. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் பெரும் அளவில் கோவில்களுக்கும் பிற தான தருமங்களுக்கும் அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் செய்துள்ள தருமங்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளன :

1.	சிதம்பரம் தில்லை நடராஜர் கோவிலில் உள்ள சிவகாமி அம்மன் கோவில் திருப்பணி	ரூ.	1,30,000/-
2.	சிதம்பரம் தில்லை நடராஜர் கோவிலில் உள்ள துர்க்கை அம்மன், அகிலாண்டீசுவரர் சன்னதிகள் திருப்பணிகள்	ரூ.	19,700/-
3.	சிதம்பரம் தில்லை நடராஜர் கோவிலில் உள்ள திருமூலநாதர் கோவில் வேலைகள்	ரூ.	64,186/-
4.	சென்னை கபாலீசுவரர் கோவில் கிழக்கு இராஜ கோபுரம் திருப்பணி அனுமதி பெற்ற மதிப்பீடு ரூ. 2,25,000/-. இதுவரை கொடுக்கப்பட்டது	ரூ.	1,00,000/-
5.	திருப்பரங்குன்றத்தில் ஆறுபடை வீடுகள் மாதிரி அமைப்புக்களில் திருத்தணி ஆலயத்தின் மாதிரியை அமைக்க ஒப்புக் கொள்ளப்பட்டது	ரூ.	2,00,000/-
6.	சென்னை அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோவிலின், வடக்குக்கோபுரத்தின் திருப் பணியைச் செய்ய ஒப்புக்கொள்ளப்பட்டது	ரூ.	1,32,000/-

தகவல் — ந. எழில்



ஆந்திர மாநிலத்தில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகக் கலாச்சார சங்கம்

ஆந்திர மாநிலம் செகந்தராபாத், ஐதராபாத் நகரங்களில் வாழ்ந்து வரும் நம் குல நகரத்தார் சமூகம், இரண்டு ஆண்டுகளுக்கு முன் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம் அமைத்து, சமீபத்தில், ''நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகக் கலாச்சார சங்கம்'' என்ற அமைப்பில், கூட்டமைப்புப் பதிவு முறைப்படி அங்கீகாரம் பெற்று பணிகள் பல செய்து வருகின்றது.

இது பற்றி அதன் செயலாளர் திரு. அ. விசுவநாதன் கூறுகிறார் :

எங்கள் சங்கத்தில் தற்சமயம் 50 புள்ளிக்கு அங்கத்தினர்களின் எண்ணிக்கை 200. ஆண்டுதோறும் பிள்ளையார் நோன்பு, கந்த சஷ்டி விழா, சித்திரா பௌர்ணமியை வெகு விமரிசையாகக் கொண்டாடி வருகிறோம். சிறிய நூலகம் ஒன்று அமைத்துள்ளோம். ஒவ்வொரு ஆண்டும் உல்லாசப் பயணம் சென்று கூடி மகிழ்கிறோம். குழந்தைகள், ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் விளையாட்டுப் போட்டிகள் தனித் தனியாக ஏற்பாடு செய்து, முன்னணியில் வருபவர்களுக்குப் பரிசு அளித்து, உற்சாகப்படுத்தி வருகிறோம். பன்னிரண்டு திங்களும் தவறாமல் பொதுக்குழுக் கூட்டமும் இரண்டு திங்களுக்கு ஒருமுறை குடும்பத்துடன் ஒன்றுகூடிக் கருத்துப் பரிமாற்றமும் செய்து கொள்கிறோம். பதவி உயர்வு பெற்று வருபவர்களுக்கும், சாந்தி, பிறந்ததின நிகழ்ச்சிகளுக்கும், சங்கம் மூலம் வாழ்த்துச் செய்திகள் அனுப்புகிறோம். எங்களுடன் பணியாற்றி மாற்றலாகிச் செல்லும் அங்கத்தினர்களுக்கு வழியனுப்பு விழா நடத்தி வருகிறோம். சிறப்புச் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்து வருகிறோம். டாக்டர் மாணிக்கனார் 'சிலப்பதிகாரக் காதை' பற்றியும், திருமதி உமையாள் முத்து, 'இலக்கிய இன்பம்' பற்றியும், திருமதி சந்திரா சிவானந்தம், 'பெண்களும் திருக்குறளும்' பற்றியும், சமீபத்தில டாக்டர் மெ. சுந்தரம் கண்ணதாசனின் சிறப்பு தாலாட்டுப்பற்றியும், நம் சமுதாயத்தைப் பிற்பட்ட வகுப்பில் சேர்க்க வேண்டியதின் அவசியம் பற்றியும், டாக்டர் தமிழண்ணல் செட்டிய வீட்டுச் சீர்முறைகள் பற்றியும் பேசினார்கள்.

நகரத்தார் குரல் எங்கும் ஒலிக்கட்டும்

தெற்கூர் N. எழிலரசன்

எங்கெங்கு விண்முட்டும் கோபுரங்கள் உள்ளனவோ, எங்கெல்லாம் ஊருணிகள் இருக்கின்றனவோ - எங்கெல்லாம் கல்விச்சாலைகள் தழைத்துச் செழித்திருக்கின்றனவோ ... அங்கெல்லாம் மலையிருக்கும் இடமெல்லாம் முருகனிருக்கும் திருத்தலம் போல ... கடல் கடந்தும் தெய்வத் திருப்பணியிருக்கும் இடமெல்லாம் நகரத்தார் குரல் எதிரொலிக்கும். இது நகரத்தார்களின் தனிப்பெருஞ் சிறப்பு. இயல்பிலேயே ஏற்பட்ட தர்ம சிந்தனைகளின் தலையாய பயன் இவை. என்றோ ஏற்பட்ட ஏற்றமிகு இச்சிறப்புத்தான் இன்று நம்மைக் காக்கும் காவல் தெய்வங்களாக விளங்கி வருகின்றன.

நாம் நிமிர்ந்து நிற்கும் போதெல்லாம் . . . வாய் திறவாமலே எதிரொலித்த நம் குரல் ... இன்று நைந்து தொய்ந்து - வாய்திறந்து அடிவயிற்றிலிருந்து ஓங்காரக் கூச்சலிட்டுக் குரல் எழுப்பினாலும் எட்டாக் குரலுக்குச் சொந்தக்காரர்களாகி விடுகிறோம்.

இன்று நம் உரிமை காக்கப்பட வேண்டும். பழம் பெருமை பேசிப் பேசி வெறும் பெருங்காய டப்பாக்களாக விளங்கி - வாய்ப் பந்தல் போட்டு வீண் கௌரவம் காட்டி ... மேல் வகுப்பினர் என்ற வெறும் சட்டை மாட்டி - ஏதும் பயனில்லாது நிற்கின்ற நிலை மாறி - இளம் சமுதாயத்தினரின் கற்பனைகள் அனைத்தும் நனவாகி - நல்வாழ்வு வாழ நம் குரல் எங்கும் ஒலிக்க வேண்டும்.

நாம் கட்டிய கல்விச்சாலைகளில் நம் குரல் கேட்க வேண்டும். அரசு அலுவல்களில் நம் இளம் சமுதாயத்தாரின் குரல் எதிரொலிக்க வேண்டும்.

நம்மவர்களிடையே ஒற்றுமை ஏற்பட்டு அதன்வழி நம்மவர்களின் பொருளாதார இணைப்பு ஏற்பட்டு . . . எல்லோரும் நன்நிலையடைய நற்குரல் எழுப்ப வேண்டும்.

தாளாத வருமானம் வந்த போது - கேளாது அள்ளிக் கொடுத்து பெருமையோடு விசேடங்களை விமரிசையாகக் கொண்டாடினோம். இன்று வருமானம் ஏதுமின்றி நாம் வாட்டமுற்று நின்றபோதும் நம் வீட்டு விசேடங்களில் வீதியிலுள்ளோர் பெருமை பேச வேண்டும் என்பதற்காக வீணாகச் செலவு செய்து படாதபாடுபடுகிறோம். இந்நிலை மாற அனைவரின் குரலும் ஒருமிக்க கேட்க ஆவன செய்ய வேண்டும்.

இன்னோரன்ன பாக்கி ஏராளம் ஏராளம் என்றிருக்க, அப்பணியினை நற்பணியாக ஏற்று நம்மவர் - நகரத்தார் குலம் காத்து முன்பிருந்த பண்பான சிறப்பெல்லாம் பார்புகழ இன்னும் திரும்பி வர ... 'குரல்' கொடுக்க முன் வரும் 'நகரத்தார் குரல்' நாடெங்கும் நம்மவர் வாழும் இடமெங்கும் ஒலிக்கச் செய்வது நமது முதற் கடமையாகும்.

''நமது பெண்கள் அதிகமாகப் படித்துவிட்டால் மாப்பிள்ளைகள் தேடுவதில் மேலும் சிரமம் ஏற்படுகிறதே, அது பற்றிய தங்கள் கருத்து என்ன?''

''பெண்கள் அதிகம் படித்துவிட்டால் அதற்கேற்ப மாப்பிள்ளை அமைவதில் சிரமம் இருப்பதை நான் அறிகிறேன். படித்த பெண்களை நம் சமூகப் பெரியவர்கள், இளைஞர்கள் வரதட்சிணைப் பிரச்னைக்கு ஆளாக்காமல் ஏற்றுக்கொண்டால், படிப்பிற்கு ஊக்கமளிப்பதாக அமையும். இல்லையேல் பெண்ணைப் படிக்க வைக்கவும் சிரமப்பட்டு, பின் மாப்பிள்ளை தேடுவதிலிருந்து மாமியார் தொகை, ஸ்ரீ தனம், வருஷ முறைகள் என்று அனைத்தையும் பெண்ணைப் பெற்றோர் சமாளிக்க இயலாமல் போய்விடும். இது சமூக வளர்ச்சிக்கு நல்ல அறிகுறி அல்ல.''

''நகரத்தார்கள் வாழும் நகரங்களிலேயே திருமணம் போன்ற முக்கிய நிகழ்ச்சிகளை நடத்துவது பற்றிய தங்கள் கருத்து என்ன?

''இந்தக் கருத்தினை நான் வரவேற்கிறேன். இதைப் பற்றி நான் தீவிரமாகச் சிந்தித்ததுண்டு. மற்ற சமூகத் திருமணங்களில் பெரும் செல்வந்தர்கள் கூட சிரமம், அலைச்சல், பண விரயமின்றி, எளிமை யாகச் செய்கிறார்கள். நம்மவர்கள் ஏன் இப்படித் திருமணத்திற்காக சிரமத்தைக் கூட்டிக்கொள்கிறார்கள் என எண்ணி வருந்தியதுண்டு. நம் பொருள், உழைப்பு இவற்றை ஆக்கபூர்வமாக அமைத்துக் கொள்வது மிகவும் அவசியம். இக்கருத்தை மனதில் கொண்டு நம்மவர்கள் வசிக்கும் ஊர்களிலேயே திருமணம் நடத்தும் பழக்கத்தை விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவந்தால் அது ஒரு நல்ல பயனுள்ள திருப்பமாக அமையும் எனக் கருதுகிறேன்.''

பேட்டி : எல். சுந்தரம்

திருக்குட நன்னீராட்டு விழா

பள்ளத்தூர் அழ. ராம. சத்திரம் ஸ்ரீ ஆட்கொண்ட விநாயகர் கோயில், பள்ளத்தூர் மு. அ. பழ. குடும்பத்தாரால் புதுப்பிக்கப்பட்டு 7-2-82 காலை 8 மணிக்கு திருக்குட நன்னீராட்டு சிறப்புற நடைபெற்றது. பக்த கோடிகளுக்கு சத்திரத்திலிருந்து காலை, பகல் உணவு வழங்கப்பட்டது.

மதுரை-625009, கிருஷ்ணபுரம் 4ஆவது குறுக்குத் தெரு, டோர்நிர். 20ல் உள்ள எக்ஸ்போ பிரிண்டர்ஸில் அச்சிட்டு, சுப. அ. நடராசன் அவர்களால் மதுரை, வடக்குச் சித்திரை வீதி, டோர் நிர். 25லிருந்து வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: வி. என். சிதம்பரம்.